தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22.02.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**இன்றைய நிகழ்ச்சி (23.02.2024)**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ‘‘6வது மலர் கண்காட்சி 2024’’ துவக்க விழா 23.02.2024 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10 மணியளவில் தாவரவியல் பூங்காவில் நடைபெறவுள்ளது. மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இணைவேந்தர், திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் கண்காட்சியைத் திறந்து வைத்து விழாப்பேருரையாற்றுகிறார். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள் விழா சிறப்புரையாற்றுகிறார். வேளாண்மை - உழவர் நலத்துறை வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர், செல்வி. அபூர்வா, இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகிக்க இசைந்துள்ளார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

நாள் : 23.02.2024 (வெள்ளிக்கிழமை)

நேரம் : காலை 10 மணி

இடம் : தாவரவியல் பூங்கா,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**

இணைப்பு: நிகழ்ச்சி அழைப்பிதழ்